மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் லத்தீப் அவர்கள் 7-வது கேள்வியையும் வரும்போது படித்துக் கொண்டு வந்திருந்தால் கொஞ்சம் நன்றாக இருந்து இருக்கும். அடுத்த கேள்விக்குப் போயிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த அழுத்த தொலைக் காட்சி அஞ்சல் நிலையங்களினால் பயன் எதுவுமில்லை என்கிற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே குறைந்த அழுத்த அஞ்சல் நிலையங்களை உயர் அழுத்த அஞ்சல் நிலையங்களாக மாற்று வதற்கான உறுப்பினர்களின் எண்ணங்கள் மத்திய அரசுக்கு முறைப்படி தெரிவிக்கப்பட்டு வலியுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏலகிரி மலையில் தொலைக்காட்சி நிலையம்

7—(*வினா எண் 127)—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஏலகிரி மலையில் தொலைக்காட்சி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : ஏலகிரி மலையைப்பற்றி மட்டும் இந்த வினாவில் இருக்கிறது. நான் கேட்டது, it includes Kavalur.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஏற்கெனவே 3, 4 ஆண்டுகளுக்கு முன்னால் இதே மன்றத் தில் ஏலகிரி மலையிலே தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இல்லையென்று சொல்கிறார்கள். ஏலகிரி மலை சுற்றுலா இடமாக அறிவிக்கப் பட்டு இருக்கிறது. ஏலகிரி மலையிலே தொலைக்காட்சி நிலையம் ஒன்றை அமைத்தால், நகரங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு மட்டுமல்ல, பக்கத்திலே இருக்கிற பல கிராமங்களுக்குக் கூட உதவுமென்ற வகையிலே மத்திய அரசை வற்புறுத்தி மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா, ஏலகிரி மலையிலே ஒரு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்க முன் வருமா என அறிய விரும்பு கிறேன்.

1989 மார்ச் 30]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துத் தெரிவித்த காரணங்களின் அடிப்படையிலே, மத்திய அரசை, அங்கே ஒரு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்குமாறு மாநில அரசு சார்பாக வலியுறுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரி அரசினுடைய நிதிநிலை அறிக்கையை வெளியிடுகின்ற நேரத்தில் சென்னை தொலைக்காட்சி நிறுவனத்தினர் மிக விரிவாகக் காட்டுகின்றனர். கைரிக்ஷாக்காரர்கள், கைவண்டிக்காரர்கள் போன்றவர்களையெல்லாம் பேட்டி கண்டு அதை விரிவாக வெளியிடுகின்ற நேரத்தில் அதைவிட பெரிய மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாட்டினுடைய நிதிநிலை அறிக்கையைப்பற்றி விரிவாக காண்பிக்கவில்லை. அப்படிப்பட்ட பாரபட்சத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துக் காட்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரால் எடுத்துத் தெரிவிக்கப்பட்ட உண்மையான குறைபாடுகள் தொடர்ந்து சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களாலும் தெரிவிக்கப்படுகின்ற கருத்துக்களாகும். அந்தக் கருத்துக்களெல்லாம் முறைப்படி மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியைப் பற்றி இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் மிகச் சிறப்பு கொடுத்துப் பேசியதற்கு நன்றி. எங்கள் ஆலங்குளம் தொகுதியில் சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் நிகழ்ச்சிகள் சரியாகத் தெரியாமல் இருப்பதால், குற்றாலத்திலே ஒரு தொலைக்காட்சி கோபுரத்தை ஏற்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சொல்லிக்கொண்டே போனால், கோரிக்கைகளும் நீண்டுகொண்டே போகும் என்ற காரணத்தினாலே தொழில் நுட்ப அறிக்கையின் அடிப்படையில் எங்கெங்கு தேவைப்படுகிறதோ அந்தந்த இடங்கள் மாண்புமிகு உறுப்பினர்களால் தெரிவிக்கப்படுமேயானால் உரிய ஆய்வு செய்து முறைப்படி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையினுடைய நிகழ்ச்சிகளை நமக்கு வாக்களித்து இங்கே அனுப்பிய பொது மக்கள் அவ்வப்போது காணுகின்ற வகையிலே 'லைவ் டெலிகாஸ்ட்' ஆக

இங்கேயுள்ள நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுமா? இதனால் விளையப் போகின்ற நன்மைகளை தயவுசெய்து கருத்திலே கொண்டு, ஆரம்பக் கட்டமாக சென்சார் செய்த நிகழ்ச்சிகளையாவது தமிழகச் சட்டமன்றம் முன்னோடியாக இருந்து அதனை காட்டு வதற்கு முயற்சிகளை எடுக்குமா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பாராளுமன்ற நிகழ்ச்சிகளை டெலிவிஷன் படம் எடுத்துக் காட்டு கின்ற முறை அனுஷ்டிக்கப்படுமானால், பிறகு மாநிலங்களி லேயும் அந்த முறையைக் கடைப்பிடிக்க முன்வரலாம்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலும் அதைப் போன்ற மலைப்பிர தேசங்களிலும் ''டிரான்ஸ்போசர் ''(Transposer) என்ற கருவிகளை அமைத்தால் போதும். அந்தக் கருவிகளை சுமார் 12 இலட்சம் ரூபாய் செலவில் 'பெல்' நிறுவனம் தயாரித்துக் கொண்டிருப்பதாக அறிகிறோம். ஆகவே உதகமண்டலம், ஏலகிரி போன்ற மலைகளில் 'பெல் நிறுவனம்' தயாரித்து வருகின்ற 'ட்ரான்ஸ் போசர்' கருவிகளை அமைக்க தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுதுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் தெரிவித்த அந்தக் கருத்துக்கள் முறைப்படி சம்பந்தப்பட்ட துறையின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : தலைவரவர்களே, தொலைக் காட்சியின் இரண்டாவது அலைவரிசையை மாநிலங்களுக்கு வழங்க வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கின்ற இந்த நிலையில் மாநில சட்டப் பேரவை மூலம் இரண்டாவது அலைவரிசையை மாநில அரசுகளுக்கு வழங்க சட்டப் பேரவை தீர்மானத்தின் மூலம் மத்திய அரசை வலியுறுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இரண்டாவது அலைவரிசையை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்ற கருத்து இங்கு மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே எல்லா மாநில முதலமைச்சர்களாலும் குறிப்பாக காங்கிரஸ் அல் லாத மாநில முதலமைச்சர்களாலும், சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் காங்கிரஸ் சார்புள்ள ஆட்சி நடைபெறுகின்ற மாநில முதலமைச்சர்களாலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அது தொடர்ந்து காங்கிரஸ் அல்லாத மாநில முதலமைச்சர்களால்

வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கு ஏற்ப இரண்டாவது அலைவரிசை மாநில அரசுகளுக்குத் தரப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயங்காது. நிச்சயமாக இப்படிப்பட்ட தீர்மானம் இங்கே நிறைவேற்றப்படும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த டெலிவிஷஸில் தமிழ்நாட்டிலேயே தமிழ் நிகழ்ச்சிகள் மிகவும் குறைந்த அளவுதான் காண்பிக்கப்படுகின்றன. அது மூன்றுமணி நேரம் என்று சொல்லப்படுகிறது. 5-30 மணியிலிருந்து 8-40 மணி வரை அதிலே கூட மற்ற மத்திய அரசு நிகழ்ச்சிகளை இடையிலே விளம்பரம் என்ற பெயரால் புகுத்துவதால் பொது மக்களுக்கு அது பெரும் தொல்லையாக இருக்கிறது. ஆகவே, 3 மணி நேரம் தமிழ் நிகழ்ச்சிகளை மட்டுமே ஒளி பரப்பி, மக்கள் கண்டு களிக்க வசதியாக நம்முடைய தமிழக அரசு செய்து கொடுப்பதற்கு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அதனால்தான் இரண்டாவது அலைவரிசை மாநில அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அவரவர்களும் எடுத்துக் கூறியதைப் போல ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, ஊட்டி, கொடைக்கானல், திருவண்ணாமலை ஆகிய எல்லா இடங்களிலும் இந்தத் தொலைக்காட்சி வைக்கப்பட வேண்டும் என்கிற விருப்பத்தை நிறைவேற்றினால் இந்தி இன்னும் சுலபமாகப் பரவுவதற்கு அவர்களுக்கு வழி ஏற்படும்.

திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்திச் சங்கத்திற்குச் சேரவேண்டிய அரசு தள்ளுபடித் தொகை

14—(*வினா எண். 623) திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்தி சங்கத்திற்கு கடந்த மூன்றாண்டு காலமாக அரசு தள்ளுபடித் தொகை கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டம், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்திச் சங்கத்திற்கு ஆகஸ்டு 1987 முடியவுள்ள தள்ளுபடி காலங்களுக்கு தள்ளுபடி மான்யத்தொகை முழுவதும் வழங்கப்பட்டுவிட்டது.